# எம்.ஆர்.டி. வருகை கார்களின் எண்ணிக்கையை குறைக்கும்




கோலாலம்பூர், டிச. 13-

சுங்கை பூலோ - காஜாங் எம்.ஆர்.டி. ரயில் சேவை அடுத்த ஆண்டு ஜூலை மாதம் தொடங்கும் போது கிள்ளான் பள்ளத் தாக்குப் பகுதிகளில் 160,000 வாகனங்களின் எண்ணிக்கையை குறைக்கும்.

ஒவ்வொரு நாளும் எம்.ஆர்.டி. ரயில் சேவையை 4 லட்சம் பயணிகள் பயன்படுத்தும் சாத்தியம் இருப்பதால் அது சொந்த வாகனங்களை பயன்படுத்தும் நபர்களின் எண்ணிக்கையை குறைக்கக்கூடும் என்று மாஸ் ராபிட் டிரான்சிட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தொடர்புத்துறை இயக்குநர் டத்தோ நஜ்முடின் அப்துல்லா தெரிவித்தார். எம்.ஆர்.டி.யின் பெரும்பாலான நிலையங்கள் வீடமைப்புப்பகுதிகளில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.